

## Chairman : Mr. S. Shanmugasamy

“கல்வி இல்லா நிலம் களர்நிலம்
அந்நிலத்தில் புல் விளைந்திடலாம் - ஆனால்
நல்ல புதல்வர்கள் விளைவதில்லை.”

என்ற கவிமணியின் வைர வரிகளுக்கு முத்தாய்ப்பாய் விளங்கி நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாய் நன்னடத்தை மிக்க மாணவ, மாணவியரை உருவாக்கி வருவது எமது வேல்ஸ் பப்ளிக் பள்ளி. ஒரு நாட்டின் எதிர்காலம் பள்ளிகளின் வகுப்பறைகளில் தீர்மானிக்கப்படுகிறது எனும் பொன்மொழிக்கு ஏற்ப எமது வேல்ஸ் பப்ளிக் பள்ளியில் பயிலும் மாணவ மாணவியரின் கல்வி மேம்பாட்டிற்காக கல்வியில் மட்டுமல்லாது ஒழுக்கத்திலும் சிறந்த வாழ்க்கைத் திறன் மேம்பாட்டிலும் சிறந்து விளங்குவதற்கு எமது பள்ளியின் இருபால் ஆசிரியப் பெருமக்களும் மிகுந்த அர்ப்பணிப்பு உள்ளத்துடன் பணியாற்றி வருகிறார்கள் என்றால் அது மிகையாகாது

**ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய்**

**மகன்தந்தைக்கு ஆற்றும் உதவி இவன்தந்தை
என்நோற்றான் கொல்எனும் சொல்.**

எனும் பொய்யாமொழிப் புலவனின் கூற்றிற்கிணங்க எமது வேல்ஸ் பப்ளிக் பள்ளியில் பயிலும் அனைத்து மாணவ, மாணவியரும் எதிர்காலத்தில் தமது பெற்றோர்களுக்கும் பெரியவர்களுக்கும் பெருமை சேர்க்கும் விதத்தில் நற்பண்பு உடையவர்களாக உருவாக்குவதில் என்றும் நாங்கள் உறுதுணையாக இருப்போம் என்பதை மிகவும் பெருமிதத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

நன்றி! வணக்கம்.